பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 18 புதன்கிழமை 02.03.2022 கதிர் 343

## திருகோணமலை விபத்தில் 15 வயது சிறுவன் மரணம்!

திருகோணமலை, மார்ச் 02

திருகோணமலை - உவர்மலைப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்து நேற்று இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

(விவரமான செய்தி 06 ஆம் பக்கத்தில்)

### யாழ். பல்கலைக்கழகத்தின் பொதுப்பட்டமளிப்பு விழா;

## 'ஊடகர் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம்' இவ்வருடம் அமரர் தில்காந்திக்குச் சமர்ப்பணம்



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழாவின்போது ஊடகத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவருக்கு வழங்கப்படும் யாழ். பல்கலைக்கழக ஊடக மாணவனும் ஊடகவியலாளருமான 'அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம்' இந்த வருடம் அமரர் செல்வி நவரத்னம் தில்காந்திக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

மொனராகலை, மரகலை தோட்டம் என்னும் கிராமத்தைச் சேர்ந்த அமரர் செல்வி நவரத்னம் தில்காந்தி யாழ். பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறையில் கல்விகற்று ஊடகவியலில் சிறப்புச் சித்தி பெற்று யாழ். பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது அண்மையில் நோயுற்ற நிலையில் இயற்கை எய்தியிருந்தார்.

அவருக்குச் சமர்ப்பணம் செய்யும் வகையில் யாழ். பல்கலைக்கழக ஊடக மாணவனும் ஊடகவியலாளருமான 'அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம்' 2

# ஜெனிவாவில் இலங்கைக்கு இம்முறை களங்கம் ஏற்படாது



### இப்படி நம்புகின்றார் நீதி அமைச்சர் அலி சப்றி

**ஜெனிவாவில் தற்போது நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை மாநாட்டில் இலங்கைக்குக் களங்கம் ஏற்படாது என நாம் நம்புகின்றோம்.**

**- இவ்வாறு நீதி அமைச்சர் அலி சப்றி தெரிவித்தார்.**

**இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-**

**ஆரம்பத்தில் இருந்தே, குறித்த மாநாடு ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான இராணுவ நிலைமையை மையமாகக் கொண்டமைந்துள்ளது.** 2

## ஜப்பானின் இரு போர்க் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தில் தரிப்பு



ஜப்பானின் இரண்டு போர்க்கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

இந்தக் கப்பல்கள் ஜப்பானிய தற்காப்புப் படைக்குச் 2

## ரஷ்யாவின் கோரத் தாக்குதலில் தீப்பற்றி எரிகின்றது உக்ரைன்!



உக்ரைனின் கார்கிவ் நகரிலுள்ள பொலிஸ் அலுவலகக் கட்டடத்தின் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யாவின் தாக்குதல் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது. இதனால் உக்ரைன் கடும் சேதத்தை எதிர்கொண்டு வருகின்றது. போர் நிறுத்தம் தொடர்பான முதல்கட்டப் பேச்சு தோல்வியில் முடிந்த நிலையில், இன்று இரண்டாம் கட்ட பேச்சு நடைபெறுகின்றது.

இந்நிலையில், இன்று உக்ரைனின் கார்கிவ் நகரிலுள்ள 2

## பூஸ்டர் தடுப்பூசி பெறாத பெற்றோர்களின் பிள்ளைகளே தொற்றால் அதிகம் பாதிப்பு

### விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா எச்சரிக்கை

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ள பெரும்பாலான சிறுவர்களின் பெற்றோர்கள் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் என்று கொழும்பு தேசிய சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி சிறுவர் 2



## சஜித்திடம் ஆலோசனை பெற்றே ஜெனிவா பறந்தனர் எம்.பிக்கள்



ஜெனிவா செல்வதற்கு முன்னர், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைச் சந்தித்து, எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆலோசனை பெற்றுள்ளனர். 2

## அரசின் கோட்டைக்குள் மாபெரும் போராட்டம்!

### தயாராகின்றது சஜித் அணி

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பாரிய அரச எதிர்ப்பு போராட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி அநுராதபுரத்தில் நடைபெறவுள்ளது.

ஆளுங்கூட்டணியின் தலைமைக்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியால் அண்மையில் பெருமெடுப்பில் நடத்தப்பட்ட பிரசாரக் கூட்டம் 2

## தனியார் பஸ்களுக்கு இ.போ.ச. ஊடாக எரிபொருள்

### போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



பொதுப்போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கு, இலங்கை போக்குவரத்துச் சபை ஊடாக எரிபொருளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இது தொடர்பான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும், அனுமதிப்பத்திரமுள்ள தனியார் பஸ்களுக்கு எந்தெந்த இ.போ.ச. 2



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## ரஷ்யாவின் கோரத் தாக்குதலில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் அலுவலகக் கட்டடத்தின் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளது. ரஷ்யாவின் ஏவுகணைத் தாக்குதலில் கார்கிவ் நகரிலுள்ள பொலிஸ் அலுவலகம் தீப்பற்றி எரிகின்றது.

உக்ரைனுடனான 2ஆம் கட்டப் பேச்சு இன்று தொடங்கவுள்ளபோதும் கூட ரஷ்யா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றது.

கார்கிவ் நகரில் கடந்த 24 மணி நேரத்தில் ரஷ்யாவின் தாக்குதலில் 21 பேர் உயிரிழந்துள்ளனர். 112 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பாதுகாப்புத்துறை, உளவுத்துறை கட்டடங்கள் அருகேயுள்ள பகுதிகளில் இருந்து பொதுமக்கள் வெளியேற ரஷ்யா நேற்றே அறிவுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பூஸ்டர் தடுப்பூசி .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் பெருமளவிலான சிறுவர்களின் பெற்றோர்களும் இதுவரை பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் எனத் தகவல் கிடைத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேற்படி வைத்தியசாலையில் தொடர்ந்து முப்பது கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

இத்தகைய நிலையில் உடனடியாக பூஸ்டர் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு தாம் அத்தகைய பெற்றோர்களைக் கேட்டுக்கொள்கிறோம் எனவும் அவர் தெரிவித்தார்.

பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாத பெற்றோர்கள் மூலம் பிள்ளைகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று நோய் தொற்றுவது அதிகம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறான பெற்றோர்களில் சிலர் ஒரு தடுப்பூசியையாயினும் இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

## சஜித்திடம் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் நடைபெற்று வருகின்றது. இம்மாநாட்டுக்கு இணையாக அரச சார்பற்ற நிறுவனங்களின் ஏற்பாட்டில் உப மாநாடுகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

இம் மாநாட்டில் பங்கேற்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் நேற்று ஜெனிவா நோக்கிப் பயணமாகினர்.

சிறைத் தண்டனை அனுபவித்து வரும், ரஞ்சன் ராமநாயக்கவை விடுவித்துக்கொள்வதே இவர்களின் பயணத்தின் பிரதான நோக்கமாக உள்ளது என எதிரணித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு ஜெனிவா நோக்கி செல்வதற்கு முன்னரே, சஜித்தைச் சந்தித்து அவ்விருவரும் ஆலோசனை பெற்றுள்ளமையுடன், தமது பயண நிகழ்ச்சி நிரல் பற்றியும் விவரித்துள்ளனர்.

## அரசின் கோட்டைக்குள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற மைதானத்திலேயே எதிரணியின் கூட்டமும் நடத்தப்படவுள்ளது.

அரசின் பரப்புரைக் கூட்டத்துக்குப் பதிலடி கொடுக்கும் முகமாகவே இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாழ்க்கைச் சுமை அதிகரிப்பு, மின்சார நெருக்கடி, உரப் பிரச்சினை உட்பட மேலும் பல விடயங்களை முன்னிறுத்தியே போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

## தனியார் பஸ்களுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையங்களில் எரிபொருளைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற விவரம் உரிய வகையில் அறிவிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து எரிபொருள் கிடைக்கப்பெற்ற கையோடு, அதனை பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அதற்கான பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது எனவும் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் கூறினார்.

அதேவேளை, தமக்கு எரிபொருளை முன்னுரிமை அடிப்படையில் பெற்றுக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## ஜப்பானின் இரு போர்க் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சொந்தமானது என இலங்கைக் கடற்படை அறிவித்துள்ளது.

கண்ணிவெடி அகற்றும் முதலாவது படைப்பிரிவு கப்பலான URAGA நேற்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்ததுடன், HIRADO இன்று வந்தடைந்தது.

இந்தக் கப்பல்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

## ஜெனிவாவில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், ஜெனிவா மாநாட்டில் இலங்கை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் எதிர்வரும் சனிக்கிழமை கலந்துரையாடப்படும்.

இந்தப் புகார்களுக்கு எதிராக வெளிவிவகார அமைச்சர் உரிய பதிலளிப்பதற்குத் தயார் நிலையில் உள்ளார். இருப்பினும், இந்தப் புகார்களின் தன்மையைப் பார்க்கும்போது அவை எங்களைக் கடுமையாகப் பாதிக்காது.

ஜெனிவா மாநாட்டு அதிகாரிகள் இன்று இலங்கையில் மட்டுமன்றி உலகம் முழுவதிலும் உள்ள நிலைமையை உணர்ந்துள்ளனர்.

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான போர்ச்சூழல் இன்று பெரிய தலைப்பாக மாறியிருப்பதே காரணம் -என்றார்.

## 'ஊடகர் நிலக்சன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

யாழ். பல்கலைக்கழகத்தின் 35ஆவது பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி பட்டமளிப்பு விழா நாளை முதல் மூன்று நாள்கள் இடம்பெறவுள்ளன.

'அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம்' யாழ். பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவின் போது கடந்த நான்கு ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகின்றது.

யாழ். பல்கலைக்கழகத்தில் ஊடக மாணவனாகப் படித்துக்கொண்டு ஊடகவியலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த நிலக்சன் 2007ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி அதிகாலை 5 மணியளவில் அவரது வீட்டில் வைத்து பெற்றோர் முன்னிலையில் ஆயுததாரிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

அவரது ஞாபகார்த்தமாக அவருடன் யாழ். இந்துக்கல்லூரியில் ஒன்றாகக் கற்ற 2004ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களால் முன்னெடுக்கப்படும் 'நிலா நிதியம்' யாழ். பல்கலைக்கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழாவின்போது ஊடகத் துறையில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவருக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் தங்கப் பதக்கத்தை அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்தமாக வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

இதன்மூலம் அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம் நான்காவது வருடமாக தற்போது வழங்கப்படவுள்ளது. 2019ஆம் ஆண்டு முதலாவது தங்கப் பதக்கத்தை செல்வி அன்ட்கேசிகா லோறன்ஸ் ராஜ்குமாரும், 2020ஆம் ஆண்டு தினேஸ் விஜயதர்சினியும், 2021ஆம் ஆண்டு செல்வி முனியப்பன் துலாபரணியும் பெற்றுக்கொண்டனர்.








## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## எதேச்சதிகாரத்தின் விரிவு

வேறு வழிகளின்றி இன்று முதல் ஏழரை மணிநேர மின்வெட்டுக்குப் பொதுப் பாவனைகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியிருக்கின்றது.

நாளில் சுமார் மூன்றில் ஒரு பகுதி நேரம் மின்விநியோகம் இல்லை என்பது முழு நாட்டையுமே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கின்றது.

கொவிட் பேரிடராலும் அரசுத் தலைமையின் தீர்க்க தரிசனமற்ற, முட்டாள்தனமான முடிவுகள், கொள்கைகள், அணுகுமுறைகள் என்பவற்றாலும் சரிந்து கிடக்கும் நாட்டின் பொருளாதாரத்தை இந்த மின்வெட்டு முழுதாக வீழ்த்தி விடும் என்பது திண்ணம்.

பொதுமக்கள் சீற்றத்தின் உச்சியில் இருக்கின்றார்கள். தனியார் துறையினர் என்ன செய்வது என்று தெரியாமல் மலைத்துப் போயுள்ளனர். உள்நாட்டு உற்பத்திகள், ஏற்றுமதிகள் படுக்கப்போகின்றன. மெல்ல மீண்டும் துளிர்த்த சுற்றுலாத் துறை முற்றாகச் சீரழியப் போகின்றது. மாணவர் கல்வியில் இருந்து எல்லாத் துறைகளிலும் பெரும் பாதிப்பும் பின்னடைவும் தவிர்க்க முடியாததாகப் போகின்றன.

வரலாற்றில் மீண்டெழ முடியாத ஒரு மோசமான பொருளாதாரச் சிக்கலிலும் பின்னடைவிலும் நாட்டை மாட்டி விட்டிருக்கும் ராஜபக்ஷக்கள் நிலைமையை இன்னும் இன்னும் மோசமாக்கிக் கொண்டிருக்கின்றமைதான் நாட்டின் பெரும் துரதிர்ஷ்டம்.

நாட்டில் இருப்பது மின்வெட்டுப் பிரச்சினையல்ல. எரிபொருள் பற்றாக்குறை சிக்கல் அல்ல. அந்நியச் செலாவணிக் கையிருப்பு இல்லை என்ற நெருக்கடிதான் உள்ளது. போதிய செலாவணி கையிருப்பில் இல்லாமையால் எரிபொருளை இறக்குமதி செய்ய முடியவில்லை. அதனால் போதிய மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியவில்லை என்று சுட்டிக்காட்டுகின்றார் பொதுப்பாவனைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரட்ணாயக்கா.

தேவையான எரிபொருள் இறக்குமதிக்குரிய அந்நியச் செலாவணியை ஒதுக்கீடு செய்து தராத அதிகாரிகள் மீது அடுத்த இரண்டு, மூன்று தினங்களில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

மின்விநியோகம், எரிபொருள் விநியோகம் போன்றவற்றை பொதுவாக மேற்பார்வை செய்யும் பொறுப்பு மேற்படி ஆணைக்குழுவுக்குத்தான் உரியது.

ஆனால் எரிபொருள் கொள்வனவுக்கான அந்நியச் செலாவணியை விடுவிக்கக் கோரி அனுப்பப்படும் கடிதங்களுக்கு சம்பந்தப்பட்ட தரப்புகளிடமிருந்து சரியான பதிலோ பிரதிபலிப்போ கூட கிடைப்பதில்லை என்கிறார் ஆணைக் குழுத் தலைவர்.

மக்களுக்குப் பொறுப்புக்கூறும் கடப்பாடின்றி பல விடயங்களை திறைசேரி மற்றும் மத்திய வங்கி அதிகாரிகள் மூடு மந்திரமாக நடந்து கொள்கின்றனர் என்று ஏற்கனவே இப்பத்தியில் சுட்டிக்காட்டியிருந்தோம். வெளிப்படைத் தன்மை இல்லை. பொறுப்புக் கூறல் இல்லை. உதாசீனப் படுத்தப்படுதல் தொடர்கின்றது என்பதுதான் நிலைமை.

சட்ட நடவடிக்கை எடுக்கும் நிலைமைக்கு பொதுப் பாவனைகள் ஆணைக்குழு தள்ளப்பட்டிருப்பதற்கு இந்த அதிகாரத் திமிர்தான் – எதேச்சதிகாரப் போக்குத்தான் – பிரதான காரணம்.

எரிபொருள் கொள்வனவுக்கான டொலரை விடுவியுங்கள் என்று ஜனாதிபதி நேரடியாக விடுத்த உத்தரவே நடைமுறைப்படுத்தப்படாமல் உதாசீனப்படுத்தப்படுகின்றது என்று சுட்டிக்காட்டுகின்றார் ஆணைக்குழுத் தலைவர்.

'அரசன் எவ்வழியோ குடிகள் அவ்வழி' என்பார்கள். நாட்டின் தலைவர் எதேச்சதிகாரமாக நடப்பார் எனின் அவரின் உயரதிகாரிகளும் அப்படித்தான் செயற்படுவார்கள். அதுதான் திறைசேரியிலும் மத்திய வங்கியிலும் கூட – உயரதிகாரிகள் மட்டத்தில் – நடக்கின்றது.



## நீண்டவரிசையில் காத்திருக்கும் மக்கள் கட்டுப்பாடுகளுடன் எரிபொருள் வழங்கல்

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை வாகன சாரதிகளுக்கும், மக்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

அந்தவகையில், ஹற்றன் மற்றும் நுவரெலியா, கொட்டகலை ஆகிய எரிபொருள் நிலையங்களைச் சூழ வாகனங்கள் அணிவகுத்து நிற்பதுடன், அதிகளவு தூரம் வரை எரிபொருள் நிரப்புவதற்கு மக்கள் வரிசை நீடிப்பதையும் அவதானிக்க முடிந்தது. அத்தோடு எரிபொருளை கொள்வனவு செய்யும் போது ஒவ்வொருவருக்கும் மிகக்குறைந்த அளவிலேயே எரிபொருளைப் பெற்றுக்கொள்ளுமாறு, எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் கட்டுப்பாடுகளை விதித்து வழங்கிவருகின்றன எனவும், எரிபொருளுக்காக காத்திருக்கும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் குறித்த எரிபொருள் நிரப்பும் நிலையங்களை அண்மித்த பகுதிகளில் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டுள்ளது.

## எரிபொருள் தட்டுப்பாட்டால் வவுனியா விவசாயிகள் பாதிப்பு

பெரும்போக நெற்செய்கை வவுனியா மாவட்டத்தில் 22 ஆயிரம் ஹெக்டேயரில் மேற்கொள்ளப்பட்டதுடன் அறுவடையும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் விவசாயிகள் அறுவடையை மேற்கொள்வதில் இன்னலுக்குள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக கடந்த சில நாள்களாக எரிபொருளுக்கு நாட்டில் பாரிய தட்டுப்பாடு காரணமாக அறுவடை இயந்திரங்களுக்கான எரிபொருள்களை விவசாயிகள் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

அவ்வாறு பெறுவதாக இருந்தாலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதுடன், அவ்வாறு கிடைக்கும் எரிபொருள்களும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கிடைக்கும் நிலையே தற்போது காணப்படுகின்றது. இதன் காரணமாக விவசாயிகள் தாங்கள் விதைத்த நெல்லை அறுவடை செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாகியுள்ளனர்.

மேலும் பெரும்போக நெற்செய்கை ஆரம்பத்தில் இருந்து உரம், கிருமிநாசினிகளுக்கான தடை போன்ற காரணங்களால் ஏற்கனவே விளைச்சல் குறைந்த நிலையில் தற்போது எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக சிறிது நெல்லைக் கூட பெற முடியாமல் போய்விடுமோ என்ற அச்சநிலை தற்போது விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை 6 ஆயிரம் ஹெக்டேயரில் சிறுபோக நெற்செய்கை வவுனியா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்நிலையில் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்வது கேள்விக்குறியாகவே உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கல்!

பெரும்போக விவசாய நடவடிக்கையில் உர பற்றாக்குறையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்ட ஈடு வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் வாரம் முதல் ஒரு ஹெக்டேயர் நிலப்பரப்பிலான விவசாய நிலத்துக்கு 50 ஆயிரம் ரூபா நட்டஈடு வழங்கப்படும் என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

ஒரு கிலோ நெல்லுக்கு 25 ரூபா வீதம் இழப்பீடு வழங்குவதற்கு பொருத்தமான முறையொன்றை உருவாக்க அமைச்சரவை முன்னதாக அங்கீகாரம் வழங்கியிருந்தது.

அதன்படி, உயர்ந்தபட்ச அளவாக 5 ஏக்கர் நிலப்பரப்பை பயிர்ச்செய்கைக்காக வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோத வெளிநாட்டு நாணயமாற்று நடவடிக்கை; பொதுமக்களின் உதவியைக் கோரும் மத்தியவங்கி

சட்டவிரோதமாக வெளிநாட்டு நாணயங்களை மாற்றும் நிலையங்கள் மற்றும் நபர்கள் தொடர்பான தகவல்களை வழங்குமாறு மத்திய வங்கி பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் வெளிநாட்டு நாணயங்களைக் கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல் மற்றும் மாற்றுதல் என்பன அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் மாத்திரமே மேற்கொள்ள முடியும் எனக் குறிப்பிட்டுள்ளது.

ஏதாவது ஒரு நிறுவனம் அல்லது நபர்கள் மத்திய வங்கியின் அனுமதியின்றி வெளிநாட்டு நாணயங்களை மாற்றும் நடவடிக்கையில் ஈடுபடுவார்களாயின் அது சட்டவிரோத செயற்பாடாகும் என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அவ்வாறான நிலையங்கள் அல்லது நபர்கள் தொடர்பாக வெளிநாட்டு செலாவணி திணைக்களத்தின் 0112 39 88 27, 0112 47 73 75 அல்லது 0112 39 85 68 என்ற இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி அறிவிக்க முடியும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

புதன்கிழமை 02.03.2022

# ரஷ்யா உக்ரைன் இடையே மீண்டும் சமாதானப் பேச்சு



ரஷ்யாவுக்கும், உக்ரைனுக்கும் இடையிலான இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சு இன்று இடம்பெறவுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுகள் நேற்று முன்தினம், உக்ரைன் - பெலரஸ் எல்லையில் இடம் பெற்றன.

இணக்கப்பாடுகள் எட்டப்படாத நிலையில், முதற்கட்ட பேச்சு நிறைவடைந்திருந்த நிலையில் இன்று இரண்டாம் கட்ட பேச்சு இடம் பெறவுள்ளது.

எவ்வாறிருப்பினும், கிவ் இல் உள்ள தொழில்நுட்ப மையங்கள் மீது தாக்குதல் நடத்த உள்ளதாகவும் ஆகவே பொதுமக்களை அங்கிருந்து வெளியேறுமாறும், ரஷ்யா தெரிவித்திருந்தது.

இதனைஅடுத்துதலைநகரில் உள்ள தொலைக்காட்சி ஒளிபரப்பு கோபுரம் ஒன்றின் மீது, ரஷ்யா நடத்திய தாக்குதலில் ஐவர் உயிரிழந்துள்ளனர் என உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், உக்ரைனின் இரண்டாவது நகரமான கார்கிவ்வில் ரஷ்யா நடத்திய தாக்குதலில் 10 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில், போர் நிறுத்தம் தொடர்பான அர்த்தமுள்ள பேச்சுகள் முன்னெடுக்கப்படும் நிலையில், உக்ரைன் மீது குண்டுத் தாக்குதல்கள் நடத்துவதை ரஷ்யா நிறுத்த வேண்டும் என உக்ரைன் ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார்.



# ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் பங்கேற்று சிறப்புரையாற்றினார் உக்ரேனிய அதிபர்

ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் சிறப்பு அமர்வில் பங்கேற்ற யுக்ரேனிய அதிபர் வொலோடிமிர் ஸெலென்ஸ்கிஅங்குஉரையாற்றினார்.

அவர் பேசுகையில், எங்கள் நாட்டில் நடப்பது துயரம். உக்ரேனியர்கள் தங்கள் நிலத்திற்காகவும், தங்களின் சுதந்திரத்திற்காகவும், வாழ்க்கைக்காகவும் போராடுகிறார்கள் என்று கூறினார்.

யாரும் எங்களை பிரிக்க முடியாது. மன உறுதியை குலைக்க முடியாது. ஏனென்றால் நாங்கள் உக்ரேனியர்கள் என்றார் ஸெலென்ஸ்கி.

மேலும் அவர், உக்ரேனிய குழந்தைகளை ரஷ்யா இலக்கு வைத்து தாக்குதல் நடத்தியதாகவும், நேற்று வரை 16 பேர் உயிரிழந்துள்ளனர்எனவும்குறிப்பிட்டார்.

நீங்கள் எங்களுடன் துணை இருக்கிறீர்கள் என்பதை நிரூபிக்கவும், உக்ரைனை அவர்களால் வீழ்த்த முடியாது என்பதையும், நாங்கள் உண்மையான ஐரோப்பியர்கள் என்பதையும் நிரூபியுங்கள் என்று அவர் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் அழைப்பு விடுத்தார். இதற்கு பாராட்டு தெரிவிக்கும் விதமாக, ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் இருக்கையை விட்டு எழுந்து கைதட்டினார்கள்.

# உக்ரைன் தொலைக்காட்சி கோபுரம் தாக்குதல்; ஐவர் சாவு



கியேவின் தொலைக்காட்சி கோபுரத்தின் மீது ரஷ்ய தாக்குதலால் ஐந்து பேர் கொல்லப்பட்டனர். மத்திய கெய்வில் இருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ள தொலைக்காட்சி கோபுரத்தின் மீது ரஷ்யப் படைகள் நடத்திய தாக்குதலில் 5 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர் என்று உக்ரேனிய அவசர சேவைகள் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளன.

# 36 நாட்டு விமானங்களுக்கு தடையினை விதித்தது ரஷ்யா



உலக அளவில் 36 நாடுகளின் விமான சேவைகளை ரஷ்யா தடை விதித்துள்ளது.

பிரிட்டன், ஜேர்மனி, ஸ்பெயின், இத்தாலி, கனடா ஆகிய நாடுகளின் விமான சேவைகளை ரஷ்யாவின் தடை உத்தரவுக்கு இலக்காகியுள்ளன.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைக்கு எதிர்வினையாற்றும் வகையில் தங்களுடைய உறுப்பு நாடுகளின் வான் பரப்பில் ரஷ்ய விமானங்கள் பறக்க தடை விதிக்க ஐரோப்பிய ஒன்றியம் முடிவு செய்தது.

அது தொடர்பான அறிவிப்பு வெளிவந்த நிலையில், ரஷ்யாவும் தமது பங்குக்கு 36 நாடுகளின் விமான நிறுவனங்களுக்குத் தடை விதித்துள்ளது.

முன்னதாக, ரஷ்யாவின் ஏரோ ப்ளோட விமானங்கள் தமது நாட்டில் தரையிறங்க பிரிட்டன் தடை விதித்திருந்தது. இதற்கு பதிலடியாக, பிரிட்டிஷ் ஏர்லைன்ஸ் நிறுவனத்திற்கும் ரஷ்யா தடை விதித்திருக்கிறது



# வெற்றிடக் குண்டுகளை பயன்படுத்துகிறது ரஷ்யா

## உக்ரைன் குற்றச்சாட்டு

ரஷ்யா தெர்மோபரிக் ஆயுதங்களை (thermobaric weapons)) பயன்படுத்துவதால் ஜெனிவா ஒப்பந்தத்தை மீறியுள்ளதாக உக்ரைன் குற்றம் சாட்டியுள்ளது.

சுமி ஒப்லாஸ்டின் வடகிழக்கு எல்லைப் பகுதியில் உள்ள ஒக்திர்காவில் உள்ள எண்ணெய்க் கிடங்கை மிகவும் கொடிய அணு அல்லாத குண்டு என்று அறியப்படும் வெற்றிடக் குண்டைக் கொண்டு ரஷ்யர்கள் தாக்கினார்கள் என உக்ரேனிய அரசாங்கம் கூறியது.

தெர்மோபரிக் ஆயுதங்களின் பயன்பாடு காரணமாக ஜெனிவா உடன்படிக்கைகளை ரஷ்யா மீறுகிறது என்று உக்ரைன் மேலும் தெரிவித்துள்ளது.

# வெளிநாட்டில் மருத்துவத்துறையை கற்கும் 90 வீத மாணவர்கள் இந்தியாவில் தகுதிபெறுவதில்லை என்கிறார் மத்திய அமைச்சர்



உக்ரைன் மீது ரஷ்யா போர்தொடுத்த நிலையில், அங்குள்ள இந்தியர்களை வெளியேற்றும் பணியில் இந்திய அரசு இறங்கியது. அப்போது கணக்கெடுக்கும்போது சுமார் 20 ஆயிரம் இந்திய மாணவர்கள் உக்ரைனில் படித்து வருவது தெரிய வந்தது. இதில் பெரும்பான்மையான மாணவர்கள் மருத்துவம் படித்து வருகிறார்கள்.

ஏன் இந்திய மாணவர்கள் உக்ரைன் சென்று மருத்துவப் படிப்பு படிக்க வேண்டும் என்ற கேள்வி அப்போதுதான் எழுந்தது. இந்தியாவில் உள்ள கல்லூரிகளில் அதிக கட்டணம், நீட் தேர்வு போன்ற பல்வேறு காரணங்கள் கூறப்படுகிறது.

உக்ரைனில் குறை வான கட்டணம் மட்டுமே வசூலிக்கப்படுவதால் அங்கு ஏராளமானோர் சென்று படிக்கின்றனர் எனக் கூறப்படுகிறது.

இது மிகப்பெரிய விவாதமாக மாறும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், வெளிநாட்டில் மருத்துவம் படிக்கும் மாணவர்களில் 90 சதவீதம் பேர் இந்தியாவில் தகுதி பெறத் தவறுகிறார்கள் என மத்திய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மத்திய அமைச்சர் பிரகலாத் ஜோஷி கூறுகையில் “வெளிநாட்டில் மருத்துவம் படிக்கும் இந்திய மாணவர்களில் 90 சதவீதம் பேர் இந்தியாவில் நடத்தப்படும் தகுதி தேர்வில் தேர்ச்சி பெறத் தவறி விடுகிறார்கள். இந்த நேரத்தில் மாணவர்கள் மருத்துவம் படிக்க ஏன் வெளிநாடு செல்கிறார்கள் என்பது குறித்து விவாதம் நடத்த இது சரியான நேரம் அல்ல” என்றார்.

## பெருந்தொகை சிகரெட்டுக்கள் தூத்துக்குடியில் பறிமுதல்

டுபாய் நாட்டின் ஜபல்அலி துறைமுகத்தில் இருந்து பெங்களூருவை சேர்ந்த ஒரு நிறுவனத்திற்கு பேரீட்சம் பழம் இறக்குமதி செய்யப்பட்டது. கப்பல் மூலம் பேரீட்சம் பழங்கள் கடந்த 28 ஆம் திகதி தூத்துக்குடி துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டு அந்த கன்டெய்னர் சிப்காட் பகுதியில் உள்ள முனையத்தில் வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் டுபாயில் இருந்து தூத்துக்குடிக்கு வரி ஏய்ப்பு செய்யும் வகையில் வெளிநாட்டு சிகரெட்டுக்கள் கடத்தப்படுவதாக பெங்களூருவைச் சேர்ந்த மத்திய வருவாய் புலனாய்வு பிரிவு அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

அதன்பேரில் அதிகாரிகள் சம்பவ இடத்திற்குச் சென்றனர். பின்னர் அதற்கான ஆவணங்களை பரிசோதித்த தூத்துக்குடி மற்றும் பெங்களூருவை சேர்ந்த மத்திய வருவாய் புலனாய்வு அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது. இதனால் கன்டெய்னரை சோதனை செய்தனர்.

அப்போது அதில் 2 அடுக்குகள் பேரீச்சம் பழங்கள் வைக்கப்பட்டிருந்தன. அதற்கு பின்னால் சுமார் 400 பெட்டிகளில் சிகரெட் பெட்டிகள் கடத்தி வரப்பட்டமை தெரியவந்தது.

இந்தோனேஷியா மற்றும் தாய்லாந்து நாட்டு சிகரெட் பண்டல்களில் இருந்த சுமார் 3 லட்சம் சிகரெட்டுக்களை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இதன் மதிப்பு ரூ.1கோடியே 20 லட்சம் ஆகும். சிகரெட் இறக்குமதிக்கு தடையில்லை என்றாலும் அதற்கு விதிக்கப்படும் வரி சுமார் 160 சதவீதம் வரை விதிக்கப்படுகிறது. அதே போன்று சிகரெட் லேபிளில் விதிமுறைகளின்படி பல்வேறு விவரங்கள் அச்சடிக்கப்பட வேண்டும்.

இந்தியாவில் சிகரெட்டுக்களை விற்பனை செய்ய அதில் எச்சரிக்கை அறிவிப்பு படம் பதிவு செய்யப் பட்டிருத்தல் உள்ளிட்ட பல்வேறு நிபந்தனைகள் உள்ளன. அவ்வாறு எச்சரிக்கை படம் பதிவு செய்யப்படாத சிகரெட்டுக்களை இறக்குமதி செய்யவும், விற்பனை செய்யவும் தடை உள்ளது. இருப்பினும் பல்வேறு நாடுகளில் இருந்து சிகரெட்டுகள் கடத்தி வரப்படுவது அடிக்கடி நடக்கிறது.

இதைத் தொடர்ந்து சிகரெட்டை கடத்தி வந்தவர்கள் யார்? அது எங்கு கொண்டு செல்ல திட்டமிடப்பட்டது? என்பது குறித்து தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது.

மேலும் பேரீச்சம் பழத்தை டுபாயில் இருந்து இறக்குமதி செய்தவர் யார்? என அவரின் முகவரியைக் கண்டறிந்து பெங்களூரு மற்றும் தூத்துக்குடி வருவாய் புலனாய்வு அதிகாரிகள் அங்கு விரைந்துள்ளனர். தொடர்ந்து சுங்க முகவரிடமும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.



## இந்தியர்களை மீட்க தொடர்ந்து நடவடிக்கை ருமேனியாவுக்கு புறப்பட்டு சென்ற விமானம்

உக்ரைனில் சிக்கியுள்ள இந்தியர்களை ருமேனியா வழியாக மீட்க சென்றிருக்கும் இந்திய விமானப்படையின் விமானம், உக்ரைன் மக்களுக்கான உதவிப் பொருள்களையும் கொண்டு சென்றுள்ளது.

உக்ரைனில் சிக்கியிருக்கும் இந்தியர்கள் அண்டை நாடுகள் வழியாக மீட்கப்பட்டு வரும் நிலையில், இன்றைய தினம் இந்திய விமானப் படையின் மூன்று சி-17 விமானங்கள் போலந்து, ஹங்கேரி, ருமேனியா நாடுகளுக்கு செல்கின்றன.

அதில் ருமேனியா புறப்பட்டுச் சென்ற விமானத்தில் உக்ரைன் மக்களுக்குத் தேவையான உணவு, தண்ணீர், போர்வை உள்ளிட்ட நிவாரண உதவிப் பொருள்களும் கொண்டு செல்லப்பட்டுள்ளன. உக்ரைனுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்கப்படும் என ஏற்கனவே அறிவித்திருந்த நிலையில், உதவிப் பொருள்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இந்தியர்களை மீட்க வரும் 8 ஆந் திகதிக்குள் 46 சிறப்பு மீட்பு விமானங்கள் இயக்கப்படவுள்ளன. நேற்று ஒரே நாளில் மட்டும் ஒப்ரேஷன் கங்கா நடவடிக்கையின் கீழ் ருமேனியா மற்றும் ஹங்கேரி வழியாக 616 இந்தியர்கள் மீட்கப்பட்டனர்.

## மஹா சிவராத்திரி தினத்தன்று 11.71 லட்சம் விளக்குகள் ஏற்றல்

### கின்னஸ் புத்தகத்தில் சாதனை

மகா சிவராத்திரியை முன்னிட்டு மத்திய பிரதேச மாநிலம் உஜ்ஜயின் மகா காளேஸ்வரர் கோயிலில் 11 லட்சத்து 71 ஆயிரம் அகல் விளக்குகள் ஏற்றப்பட்டு, கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது.

சிவ ஜோதி அர்ப்பணம் மகோற்சவம் என்ற பெயரில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியை, முதலமைச்சர் சிவராஜ்சிங் சவுகான் 11 அகல் விளக்குகள் ஏற்றி ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான தன்னார்வலர்கள் அகல் விளக்குகளை ஏற்றினர். 5 பேர் அடங்கிய கின்னஸ் குழுவினர் நிகழ்ச்சியை நேரில் பார்வையிட்டு அங்கீகரித்து சான்றிதழ் அளித்தனர். 5 டிரோன் கமராக்களும் இதற்காக பயன்படுத்தப்பட்டன.

இந்நிகழ்ச்சிக்கு பயன்படுத்தப்பட்ட அகல் விளக்குகள், எண்ணெய் உள்பட அனைத்தும் கழிவாக வீணாகாமல் மறுசுழற்சி முறையில் பயன்படுத்தப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.



## கோவையில் 50 நாள்களுக்கு பின்னர் இன்று முதல் விசைத்தறிகள் இயங்கின

கோவை, திருப்பூர் மாவட்டங்களில் 2 லட்சம் விசைத்தறிகள் உள்ளன. இவற்றில் 5 லட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை பார்த்து வருகின்றனர்.

3 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஜவுளி உற்பத்தியாளர்கள், விசைத்தறி உரிமையாளர்களுக்கு கூலி உயர்வு வழங்கி வந்தனர். அதன் அடிப்படையில் கடந்த டிசெம்பர் மாதம் முதல் புதிய கூலி உயர்வு அமுல்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனாலும் கூலி உயர்வு வழங்கவில்லை.

இதையடுத்து விசைத்தறி உரிமையாளர்கள் கடந்த ஜனவரி 9 ஆந் திகதி முதல் கூலி உயர்வு மற்றும், சோமனூர் ரகத்திற்கு 23 சதவீதம், பல்லடம் ரசகத்திற்கும் 20 சதவீதமும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டம், குடும்பத்துடன் உண்ணாவிரத போராட்டம், இவர்களுக்கு ஆதரவாக கடையடைப்பு என போராட்டம் வலுத்தது. அதிகாரிகள் நடத்திய பல கட்ட பேச்சுவார்த்தையும் தோல்வியில் முடிந்தது.

நேற்று நடந்த பேச்சில், சோமனூர் ரகத்திற்கு 19 சதவீதமும், இதர ரகத்திற்கு 15 சதவீதம் வழங்கப்படும் என உடன்பாடு ஏற்பட்டது.

இதையடுத்து தங்கள் போராட்டத்தை கைவிடுகிறோம் என விசைத்தறி உரிமையாளர்கள் அறிவித்தனர்.

50 நாள்களுக்கு பிறகு இன்று காலை முதல் விசைத்தறிகள் இயங்க தொடங்கின.

கோவை மாவட்டம் சோமனூர், கருமத்தம்பட்டி, பதுவம் பள்ளி, கிட்டாம் பாளையம், தொட்டிபாளையம், சூலூர், பருவாய் பகுதிகளில் உள்ள விசைத்தறிகள், திருப்பூர் மாவட்டம் பல்லடம் மற்றும் இதர பகுதிகளில் என மொத்தமுள்ள 2 லட்சம் விசைத்தறிகளிலும் தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டனர். உள்ளூர் தொழிலாளர்களை கொண்டு விசைத்தறிகள் இயக்கப்பட்டு வருகின்றன. நீண்ட நாள்களுக்கு பிறகு விசைத் தறிகள் இயங்க தொடங்கியதாலும், தாங்கள் கேட்ட கூலி உயர்வு கிடைத்ததாலும் விசைத்தறி உரிமையாளர்கள் மகிழ்ச்சியுடன் பணியாற்றி வருகிறார்கள்.

கோவை, திருப்பூர் மாவட்டங்களில் உள்ள விசைத்தறிகளில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பணிபுரிந்து வந்தனர். வேலை நிறுத்தம் காரணமாக இவர்கள் அனைவரும் ஊருக்கு சென்றிருந்தனர். தற்போது வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்து பணிகள் தொடங்கியுள்ளமையால் சொந்த ஊர்களில் இருந்து பணிக்கு வந்த வண்ணம் உள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# குமுக்கன் ஆற்றங்கரையில் காளிமஹாதேவிக்கு 8மணிநேர மாபெரும் சண்டிஹோம பெரும்யாகம்!





(காரைதீவு சகா)

கிழக்கு மாகாணத்தின் தென்கோடியிலுள்ள குமுக்கன் ஆற்றங்கரை தீர்த்தத்திற்கு அண்மையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட காளி மஹாதேவிக்கு எட்டு மணி நேர வரலாறு காணாத மாபெரும் சண்டி ஹோம பெரும்யாகம் நிகழ்த்தப்பட்டுள்ளது.

'சித்தர்களின் குரல்' அமையத்தின் உலகளாவிய தலைவர் ஸ்ரீ சிவசங்கர் ஜீயின் ஏற்பாட்டில் அடர்ந்த வனாந் தரத்தில் அமையப்பெற்ற காளி அம்பாள் சிலையின் முன்னால் இம்மாபெரும் யாகம் நேற்றுமுன்தினம் நிகழ்த்தப்பட்டது.

இதுவரை உலகில் எங்கும் நடந்திராத அளவுக்கு ஒரு பிரமாண்டமான சண்டி ஹோமத்தை யாழ்ப்பாணம் இணுவில் தர்மசாஸ்தா குரு குல வேதவாத்தியார் சிவகாமசதுர்வேத சக்கரவர்த்தி மஹா தேவ சிவஸ்ரீ ஸ்ரீவத் சாங்க குருக்கள் தலைமையிலான வேத பண்டிதர்கள் நிகழ்த்தியமை கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.

'சித்தர்களின் குரல்' சமஸ்தான ஆஸ்தான சிவாச்சாரியர் உலகப்புகழ் பெற்ற பிரபல வேத சாஸ்திர விற்பன்னர் ஸ்ரீ வத்சன் குருக்கள் தலைமையில், ஸ்ரீ சிவசங்கர்ஜீ முன்னிலையில், சித்தர்களின் குரல் அமைய தலைவர் ஆதித்தன், உப தலைவர் மனோகரன், சிவாயநம மகேஸ்வரன் ஜீ மற்றும் சித்தர் தொண்டர்கள் காலை 9மணிமுதல் மாலை 5 மணிவரை எட்டு மணிநேரம் தொடர்ச்சியாக யாகத்தை நிகழ்த்தினர்.

அசுரர்களை அழித்து தர்மத்தைக் காக்க பல்வேறு வடிவங்களை எடுத்திருக்கும் ஆதிபரா சக்திதேவியின் வடிவம்தான் சண்டிமஹாதேவி. அங்கு யாகம் நடைபெற்ற அதேவேளை சம காலத்தில் காளிமஹாதேவிக்கு அபிஷேகமும் நடைபெற்றது.

அண்டசராசரத்தை ஒட்டுமொத்த இயக்கமாக கட்டுப்படுத்தும் 13 மாபெரும் சக்திகளை திருப்பதிப்படுத்திப் பூஜிப்பதற்காக சண்டிஹோமத்தில் பஞ்சகவ்வியம், சந்தனாதிதைலம், பஞ்சாமிர்தம், மஞ்சள்தூள், நெய், கரும்பு, பன்னீர், தேன் உள்ளிட்ட 13 அபிஷேகத்திரவியங்கள் ஆகுதியாக்கப்பட்டன.

கலியுக நாதஸ்வர இசையுலக சக்கரவர்த்தி கலைமாமணி ஈழநல்லூர் பாலமுருகன் குழுவினரின் நாதஸ்வர மேளதாள வாத்தியம் அடர்ந்த கானகத்தை இசைமழையில் நனைய வைத்தது.

வெட்டிவேரில் உருவாக்கப்பட்ட 64 வகை உபசாரங்கள் அங்கு படைக்கப்பட்டன. கானகத்தில் இனிமையான வாசனை கமழ்ந்தது.

இறுதியாக வஸ்திரதானம் வழங்கப்பட்டதோடு மற்றும் வனத்திலுள்ள அத்தனை தேவதைகளுக்கும் வன போஜனம் வழங்கப்பட்டது.

இறுதியாக சித்தர்களின் குரல் அமையத்தின் உலகளாவிய தலைவர் ஸ்ரீ சிவசங்கர் ஜீயின்காலில் வீழ்ந்து அனைவரும் ஆசீர்வாதம் பெற்றதும் அவர் சிவனுக்குரிய உருத்திராட்சமாலை வழங்கினார்.

# 3 ஆவது குழந்தையைப் பெற்ற தாய்மாருக்கு உதவித் தொகை

## மட்டக்களப்பில் 'சுவிஸ் அறம்' வழங்குகிறது





மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உட்பட்ட கிராமங்களில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைவால் மூடப்படும் நிலையில் உள்ள பாடசாலைகளைக் கருத்தில் கொண்டு, மட்டக்களப்பு நரிப்புல் தோட்டம் என்னும் கிராமத்தில் இரண்டு பிள்ளைகளுக்கு மேல் மூன்றாவது குழந்தையைப் பெற்றெடுத்த 5 தாய்மாருக்கு தலா 10ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டதுடன் பிள்ளைகளின் 18 வயது வரை மாதம் ஒன்றிற்கு ரூபா ஆயிரம் கிடைக்கக் கூடியதாக வங்கியில் நிதி வைப்புச் செய்யப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் மேலும் மகிழவட்டவான், பங்குடாவெளி, விழாவட்டவான், நெல்லூர், சொறுவாமுனை, மணிபுரம் ஆகிய கிராமங்கள் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்திட்டம் தொடங்கி 6 ஆவது ஆண்டு காலடிபதித்த இவ்வேளையில் இத்திட்டத்தின் கீழ் 132 தாய்மார்கள் உதவித் தொகையைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 27 ஆம் திகதியன்று மேலும் 17 தாய்மார்கள் இத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளனர். இன்று இத்திட்டத்தின் கீழ் உதவி தொகையைப்பெற்றுவரும்அனைத்து தாய்மாருக்கும் பிள்ளைகளுக்கும் நாட்டின் அசாதாரண நிலைமையை கருத்தில் கொண்டு உடு துணியும் ரொக்கப்பணமும் வழங்கப்பட்டன.

இந்த உதவித்தொகை சுவிஸ் அறம் (swiss Aram)என்னும் அமைப்பின் ஊடாக வழங்கப்பட்டது. 6 வருடகாலமாக இத்திட்டத்திற்கு உதவி செய்யும் அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் சுவிஸ் அறம் அமைப்பு நன்றியை தெரிவித்ததுடன் மேலும் உதவி தொடர வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பிரதி கல்வி பணிப்பாளர் மகேந்திரகுமார், பட்டிருப்பு கல்வி நிர்வாக பிரிவு மற்றும் பிரதி கல்வி பணிப்பாளர் (தாபன மற்றும் பொது முகாமைத்துவம்) க.ஹரிகரராஜ், இத்திட்டத்திற்கு எல்லா வகையிலும் முழு ஒத்துழைப்பை வழங்கிவருகிற சுவிஸ் வாழ் திருமதி சிவசாந்தி அமிர்தலிங்கம், ஆசிரியர் வே.சசிகரன்,கிராம அபிவிருத்தித் தலைவர், கோவில் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், பெரியோர்கள், தாய்மார்கள், ஊர் மக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.



# தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் 108 கருங்கல் சிவலிங்கங்கள்

(காரைதீவு குறூப் நிருபர் சகா)

பஞ்சஈஸ்வரங்களுள் ஒன்றான வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திற்கு சிவனடியார்கள் நேற்று சிவராத்திரி தினம் காலை முதல் சென்று வழிபாடாற்றினார்கள்.

ஆலய வீதியில் 'சிவபூமி' நிறுவத்தினரால் அமைக்கப்படும் திருமந்திர அரண்மனையில், தனித்து கருங்கற்களால் உருவாக்கப்பட்ட 108 சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்து வைக்க ஏற்பாடு செய்ய ப்பட்டிருந்தது.

அதற்காக யாழ்ப்பாணம், கோண்டாவில் சிவபூமி வளாகத்திலிருந்து எடுத்து வரப்பட்ட சிவலிங்கங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டருந்தன. நேற்று காலை முதல் பக்தர்கள் அதனை கண்டு வழிபட்டனர். கொரோனாவுக்கு பின்னர் மக்கள் பெருந் தொகையாக ஆலயத்திற்கு சென்று வழிபடுகின்றனர்.

# திருமலை உவர்மலை விபத்தில் சிறுவன்சாவு; இருவர்படுகாயம்

திருகோணமலை, உவர்மலை பகுதியில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான் எனத் திருகோணமலை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர். இவ்விபத்து நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஒரு மோட்டார் சைக்கிளில் தலைக்கவசம் இல்லாமல் மூவர் பயணித்த நிலையில் அதிவேகத்தினால் வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிளில் மின்கம்பத்துடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்

குறித்த விபத்தில் திருகோண மலை சுமேதகம பகுதியைச் சேர்ந்த கே.வை.சஹன் மதுஸங்க (வயது- 16) என்ற சிறுவன் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளான். அதே பிரதேசத்தைச் சேர்ந்த இசுரு அக்ஸான் (வயது- 20) என்பவர் பலத்த காயங்களுடன் திருகோணமலை பொது வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் எனவும், அதே பிரதேசத்தைச் சேர்ந்த கவிஸ்க இம்ஹான் (வயது-15) என்பவரும் காயமடைந்தநிலையில் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் திருகோணமலைத் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# திருமலையில் கவிதை நூல் வெளியீடு

'அன்பின் பாதை சமூகத்தின்' எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றம் நடத்திய கவிஞர் வேலணையூர் ரஜிந்தனின் 'பேரன்பின் படிமங்கள்' கவிதை நூல் அறிமுக விழா திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாகக் கலந்துகொண்ட திருகோணமலை உயர் தொழில்நுட்பக் கல்லூரி சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளர் தங்கராசா ஜீவகன் மற்றும் திருகோணமலை பத்திரகாளி அம்மன் ஆலய ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ சோ.ரவிச் சந்திரக்குருக்கள் ஆகியோர் முதற்பிரதி பெற் றனர். நூல் நயவுரையை கவிஞர் ஷெல்லிதாசன், கவிதாயினி, பானுசுதாகரன் ஆகியோர் வழங்கினர்.

# பயணிகள் பஸ் சேவைகளை மட்டுப்படுத்துவதற்கு வவுனியா தனியார் பஸ் உரிமையாளர் தீர்மானம்



வவுனியா மாவட்டத்தில் இருந்து பயணிகள் பஸ் சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கு சுழற்சிமுறையில் எரிபொருள் கிடைப்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்தித் தருமாறு வவுனியா மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ராஜேஸ்வரன் தெரிவித்தார்.

தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி நிலைமை தொடர்பாக வவுனியாவில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்–

'தனியார் பஸ் தரப்பினராகிய நாங்கள் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் மக்களுக்கான சேவைகளை வழங்கி வருகின்றோம். குறிப்பாக பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் எமது பஸ்களுக்கான எரிபொருள் மிகவும் தாமதமாகவே எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து கிடைக்கின்றது. இதனால் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளையே வழங்கவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

எதிர்வரும் வாரத்தில் பாடசாலைகளும் ஆரம்பமாக இருக்கின்றது. எனவே, இந்த நிலைமை நீடித்தால் பாடசாலை மாணவர்களுக்கான சேவைகளை வழங்குவதிலும் பாரிய சிக்கல் நிலைமை இருக்கின்றது. எனவே, பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கு நாளாந்தம் தேவையான எரிபொருளை சுழற்சிமுறையில் வழங்குவதற்கு ஆவணசெய்யுமாறு அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கின்றோம்.

இதேவேளை அடுத்த வாரமளவில் கொழும்பில் இருந்து வடக்கிற்கு வரும் ரயில்களின் சேவைகள் வீதிப்புனரமைப்புப் பணிகளுக்காக இடைநிறுத்தப்படவுள்ளன. எனவே, பயணிகள் மேலும் அசௌகரியங்களை சந்திக்கவேண்டிய நிலை ஏற்படும்.

எனவே, கொழும்பு சேவையில் ஈடுபடும் பஸ்கள் மற்றும் வடக்கிற்குள் சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கு உரியநேரத்தில் எரிபொருள் கிடைப்பதற்கு ஆவணசெய்யுமாறு வடமாகாண ஆளுநர் மற்றும் மாவட்ட அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

அத்துடன் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை வழங்கும் ஊழியர்களுக்கு கையூட்டலை கொடுத்தே எரிபொருளை பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை இருக்கின்றது. எனவே எரிபொருள் நிரப்பு நிலையங்களில் என்ன நடக்கிறது என்று பரிசோதனை செய்யுமாறு பொலிஸாரைக் கேட்டுக்கொள்கின்றோம்.

தற்போது வரை எமது முழுமையான சேவைகளை வழங்கிவருகின்றோம். ஓரிரு தினங்களில் எரிபொருள் சீராக கிடைக்காவிட்டால் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளையே வழங்கவேண்டிய நிலை ஏற்படும். – என்றார்.

## விடுதலைப் புலிகளால் ஏற்பட்ட தாக்கங்களைக் காட்டிலும் தற்போது பாரதூரமான சவால்களை எதிர்கொண்டுள்ளோம்

### உதய கம்மன்பில சுட்டிக்காட்டு



தமிழீழ விடுதலைப் புலிகளால் ஏற்பட்ட தாக்கங்களைக் காட்டிலும் தற்போது பாரதூரமான சவால்களை தாம் எதிர்கொண்டுள்ளோம் என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் இலங்கையில் முதலீடு செய்ய முதலீட்டாளர்கள் அச்சம் கொண்டுள்ளனர் என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

ஆகவே, பொருளாதார நெருக்கடியைச் சீர்செய்ய சர்வதேச நாணய நிதியத்தை நாடுகின்றமை அவசியம் என சுட்டிக்காட்டினார்.

மேலும், டொலர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை எரிபொருள் நெருக்கடி தொடரும் என்றும் எதிர்வரும் 4 நாள்களுக்குத் தேவையான எரிபொருள் மாத்திரமே கையிருப்பில் உள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும் இறக்குமதி செய்யும் போது அரசாங்கம் மருந்து, எரிபொருள், தொழில்துறை பொருள்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

கடந்த வருடம் 2100 கோடி டொலர் செலவு ஏற்பட்டபோதும் அதில் எரிபொருளை இறக்குமதிக்கு 280 கோடி டொலர்களே செலவிடப்பட்டன என அமைச்சர் தெரிவித்தார்.

## இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனை இனி அவசியமில்லை!

முழுமையாகக் கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்று வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் நேற்று முதல் பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொள்ளத் தேவையில்லை என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன வெளியிட்ட புதிய சுற்றுநிரூபத்தில், முழுமையாகத் தடுப்பூசிகளைப் பெற்று 2 வாரங்கள் நிறைவடைந்த சுற்றுலாப் பயணிகள் பி.சி.ஆர். அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை.

8 வயது அல்லது அதற்குக் குறைந்த சிறார்கள், ஒரு தடுப்பூசியேனும் ஏற்றியிருப்பின் அது முழுமையான தடுப்பூசி ஏற்றிக்கொண்டதாகக் கருதப்படும்.

எவ்வாறாயினும், 12 அல்லது அதற்கு மேற்பட்ட வயதானவர்கள் முழுமையாகத் தடுப்பூசி பெற்றிருக்காவிடின், நாட்டுக்கு வருகை தருவதற்கு 72 மணித்தியாலத்துக்குள் பெற்றுக் கொண்ட பி.சி.ஆர். அறிக்கையை சமர்ப்பிப்பது கட்டாயமானது.

அதே போன்று ஏதேனுமொரு தடுப்பூசியை ஒரு தடவை மாத்திரம் பெற்றுக் கொண்டால் போதும் என்று பரிந்துரைக்கப்பட்டிருக்குமாயின், அவ்வாறான தடுப்பூசியைப் பெற்று நாட்டுக்கு வருபவர்களும் முழுமையாகத் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்களாகவே கருதப்படுவர்.

கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்து 7 நாள்களின் பின்னர் முதற்கட்ட தடுப்பூசியை மாத்திரம் பெற்றுக் கொண்டவர்கள் வருகை தருவார்களாயின், கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டமைக்கான பி.சி.ஆர். அல்லது அன்டிஜன் அறிக்கையையும், முதற்கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டதற்கான அட்டையையும் தம்வசம் வைத்திருக்க வேண்டும்.



கடந்த ஆறு மாதங்களுக்குள் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டு, ஒரு தடுப்பூசியை மாத்திரம் பெற்றுள்ளவர்கள் தடுப்பூசியைப் பெற்று இரு வாரங்களின் பின்னர் மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையை தம்வசம் வைத்திருக்க வேண்டும்.

நாட்டுக்கு வரும் அனைத்து சுற்றுலாப் பயணிகளும் தம்வசம் வைத்திருக்கும் கொரோனாப் பரிசோதனை அறிக்கைகள் மற்றும் தடுப்பூசி அட்டைகள் ஆங்கில மொழியில் காணப்பட வேண்டும்.

மார்ச் மாதம் முதலாம் திகதி நள்ளிரவு முதல் இந்த புதிய வழிகாட்டல்கள் நடைமுறைப்படுத்தப்படும். உலக மற்றும் தேசிய மட்டத்திலான கொவிட் நிலைமைகளை ஆராய்ந்து அதன் பின்னர் புதிய வழிகாட்டல்களின் மாற்றங்கள் செய்யப்படும். – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## களனிதிஸ்ஸ மின் நிலையம் செயலிழந்து ஒருமாதம் பூர்த்தி

களனிதிஸ்ஸ மின் நிலையம் செயலிழந்து ஒரு மாதம் பூர்த்தியடைந்துள்ளது.

மின்சார சபையின் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொது முகாமையாளருமான அன்ட்ரூ நவமுனி இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

செயலிழந்த சப்புகஸ்கந்த மின் உற்பத்தி நிலையத்தில் தற்போது மின்னுற்பத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சட்டவிரோதமாக தங்கத்தை டுபாய்க்கு கடத்தமுயன்ற இருவர் கைதாகினார்கள்

1.5 கோடி ரூபா பெறுமதியான தங்கத்தை சட்டவிரோதமாக டுபாய்க்கு கடத்த முற்பட்ட இந்தியப் பிரஜைகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இவர்கள் இருவரும் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர் என கட்டுநாயக்க விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கைது செய்யப்பட்டபோது அவர்களிடம் இருந்து 490 கிராம் எடையுள்ள மூன்று தங்கக் கட்டிகள் மீட்கப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஒற்றையாட்சிக்குள் 13 ஐ ஏற்பதன் ஊடாக எமது அரசியல் நகர்வை முடக்கக்கூடாது

### கஜேந்திரகுமார் இப்படிக் கருத்து

ஒற்றையாட்சிக்குள் 13 ஆவது திருத்தத்தை ஏற்றுக் கொள்வதன் ஊடாக எமது அரசியலை முடக்கக் கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். வவுனியா கனகராஜன் குளத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.03.2022இல் வெளியிடப்பெற்றது.